# செய்திதாள் அறிவிப்பு

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் திரு. முனீஸ்வர் நாத் பண்டாரி அவர்களின் தலைமையில் உதகமண்டலம் தமிழகம் விருந்தினர் மாளிகையில் மாவட்ட நிலையிலான பல்வேறு துறை அலுவலர்களின் கூட்டம் இன்று 29.05.2022 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நீலகிரி மாவட்ட நீதிபதி திரு. P. முருகன் அவர்கள் இக்கூட்டத்திற்கு வரவேற்புரை வழங்கினார். இக்கூட்டத்தில் நீதியரசர்கள் திரு. N. சதீஸ்குமார், திருமதி. V. பவானி சுப்பராயன், மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலர், தமிழக அரசின் கூடுதல் அட்வகேட் ஜெனரல் திரு. இரவிந்திரன், நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து நீதிபதிகள், நீலகிரி மாவட்ட அனைத்து வழக்கறிஞர் சங்க நிர்வாகிகள் மற்றும் பல்வேறு துறைகளின் மாவட்ட நிலையிலான அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் திரு. முனீஸ்வர் நாத் பண்டாரி அவர்கள் நீதித்துறையின் உள்கட்டமைப்பு பணிகளுக்கு அனைத்து துறையினரும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனவும், அனைத்து நீதிமன்றங்களும் சொந்த கட்டிடத்தில் இயங்குவதற்கு மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார். கூட்டத்தின் இறுதியில் நிரந்தர மக்கள் நீதிமன்ற தலைவர் திரு. R. ஸ்ரீதரன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

ஒப்பம் திரு. ஏ, அப்துல் காதர்,
தலைவர்/மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்ட ஆணை பணிக்குழு,
உதகமண்டலம்.